இலங்கையில் புராதன விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

அலகுபரீட்சை – 05

நா.பிரகாஸ் B.A **வரலாறு** **1 மணித்தியாலம்**

1.கல்லாயுத தொழிநுட்பம் எக் குடியற்ற காலகட்டத்தில் காணப்பட்டது

1)முன் வரலாற்று காலம்
2)வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3)ஆரம்ப வரலாற்று காலம்
4)வரலாற்று காலம்

2. வெள்ளை நிறப்பிண்ணியில் சிவப்பு நிறக்கோடுகளுடன் மடக்கு எனும் மட்பாண்டம் கண்டுபிடிக்கப்பட்ட இடம்

1) உடரஞ்சாமடம்
2) பெரகல
3) பதிராஜவெல
4) இராவணஎல

3. புராதன காலத்தில் குளத்தின் உறுப்புகளில் ஒன்றான அவரண அழைக்கப்படும் விதம்.

1) கலிங்கல்
2) அணைக்கட்டு
3) அலைதாங்கி
4) சுருங்கை

பின்வரும் A-D வரையான கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பின்வரும் 4,5 ஆகிய வினாக்களுக்கு விடையை தெரிக.

A- பாரிய நீர் கொள்ளளவை பேணி பாதுகாத்தல்

B- குளத்தில் உருவாகும் அலைகளினால் மூலம் அணைக்கட்டு அரிக்கப்படுவதை தடுத்தல்

C- குளத்து நீரை கால்வாய் ஊடாக வெளியேற்றல்

D- குளத்து நீரை கொண்டு செல்லல்

4. மடைக்கதவுடன்(கலிங்கல்) தொடர்புடைய பணியாக காணப்படுவது

1) A 2) B 3) C 4) D

5.அணைக்கட்டுடன் தொடர்புடைய கூற்றாக காணப்படுவது

1) A 2) B 3) C 4) D

6. கி.மு 2ம் நூற்றாண்டு கல்வெட்டில் கால்வாய் அமைக்கும் பெறுப்பதிகாரியை எவ்வாறு அழைத்தனர்.

1)கமிக
2)தசகம் எத்தன
3)அடிக
4)தடிக

7. புராதன காலத்தில் நீரின் தரம்,குளிர்ச்சியை பாதுகாத்தல், அமிலச்சுவை கிணற்று நீரில் சேர்வதை தடுத்தல் போன்றவற்றிற்கான மட்பாண்டங்கள் இட்டு அமைக்கப்பட்ட கிணறுகள் அழைக்கப்பட்ட விதம்

1)கால சுமண
2)அவரண
3) தண்ணீர் விளக்கு
4)ஊராகொட

8. புராதன காலத்தில் "உயரத்திலிருந்து ஓடும் நீரை திடீரென தடுக்கும் போது கணிசமான அளவு அமுக்கம் ஏற்படுவதன் மூலம் நீரை மேலேழும்" இத் தொழிநுட்பம் பின்பற்றப்பட்ட நீர்ப்பூங்கா காணப்படும் இடம்

1) சீகிரியா நீர்பூங்கா
2)ரன்மசுப் பூங்கா
3)யானைப் பொய்கை
4)குட்டம் பொய்கை

www.lkedu.lk

9.அனுராதபுர காலத்தில் அமைக்கப்பட்ட விகாரைகளில் ஒன்றாக அமையாதது

1) ஜேதவனராமய
2) அபயகிரி விகாரை
3)தூபராம விகாரை
4)தெமடி மகசாய

10.மிகப் பெரிய அத்திவாரத்தின் மேல் அமைக்கப்படல், இடிதாங்கியின் பயன்பாடு போன்ற தொழிநுட்ப அம்சங்கள் நிர்மாணிக்கப்பட்ட நிர்மானிப்பு.

1)ருவன்வெலிசாய
2)ஆலாகபன
3)ரன்கொத் விகாரை
4)சீகிரியா

11.பண்டைய காலத்தில் கி.பி 5ம் நூற்றாண்டு சிறந்த நகர நிர்மாணத்துடன் உருவாக்கப்பட்டமைக்கான சான்று

1)மகாகம
2)அனுராதபுரம்
3)பொலநறுவை
4) சீகிரியா

12. கற்பிணித்தாய்மார் தேவைக்காக சொத்திசால பிரசவ விடுதி அமைத்த மன்னன்

1)1ம் விஜயபாகு
2)2ம் இராஜசிங்கன்
3)நிசங்கமல்லன்
4)பண்டுகாபயன்

13. வைத்தியத்துறையில் உயர் தொழினுட்பம் பின்பற்றப்பட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெற்ற இடம்

1)மிகிந்தலை
2)மெதிரிகிரிய
3) ஆலாகபன
4)மகாகம

14.பண்டைய காலத்தில் இரும்பு பிரித்தெடுத்தற்காக பிரதான ஆதாரம் காணப்பட்ட இடம்

1)அலகொலவெவ
2)சமனல வெவ
3)தெஹிகக அலகந்த
4)சிகிரியா

15.புரதான அகழ்வின் போது எவ் விகாரையில் நிற ஓடுகள் காணப்பட்டதற்கான ஆதாரம் கிடைக்கப்பெற்ற இடம்

1)ருவன்வெலிசாய
2)தூபராம விகாரை
3)ஜேதவனராமய
4)அபயகிரி விகாரை

16.பசுக்களின் பாதுகாப்பிற்காக சாந்தி பூசை நடைபெற்றிருந்தமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெற்ற இடம்

1) சப்பிரகமுவ மாகாணம்
2)மத்திய மாகாணம்
3)மேல் மாகாணம்
4)தென் மாகாணம்

17. நீளத்தை அளக்க பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட மிகச்சிறிய அலகு

1) வியத்த
2) அங்குலம்
3)பரமாணு
4)கவ்வ

18.நிசங்கமல்லன் காலத்தில் பிரதான வீதிகளில் கவ்வவிலிருந்து கவ்வைக்கு நடப்பட்ட கற்றூண் எவ்வாறு அழைக்கப்பட்டது.

1)காவுதகனு
2)உசக
3)சுவர்ண
4)யொதுன

www.lkedu.lk

19)புரதான தொழிநுட்பத்தில் முன்னோர்கள் அசையா நீர் விஞ்ஞான முறை தொடர்பான அறிவுடன் உருவாக்கப்பட்ட நிர்மாணிப்பாக கருதப்படுவது

1) இரும்பு பிரித்தெடுத்தல் 2)மடக்கு மட்பாண்டம்

3) டெடிகமை யானை விளக்கு 4) வீடமைப்பு

20)பண்டைய காலத்தில் தெடிகம யானை விளக்கு கண்டுபிடிக்கப்பட்ட விகாரை

1) தெடிகம சூதிகர சைத்தியம் 3)ஆலகபன பிரிவெனா

2)தெமழ மகாசாய 4) ருவன்வெலிசாய விகாரை

பகுதி –ii

01) i. பின்வரும் இடங்களை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக.
உடரஞ்சாமடம் ,அனுராதபுரம் ,சிகிரியா,பொலனறுவை

ii. A,B ஆகிய படங்கள் தொடர்பான வினாக்களுக்கு விடை தருக



1. அருகில் காணப்படும் படம் யாது.
2. இவ் உபகரணம் கண்டுபிக்கப்பட்ட விகாரை.
3. இவ் உபகரணம் எவ்உலோகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.
4. இதில் பயன்படுத்தப்பட்ட தொழிநுட்பம்.

02) i. பின்வரும் A,B,C ஆகிய குளங்கள் அமைந்துள்ள நதிகளை குறிப்பிடுக

A-கலாவாவ

B- மின்னேரியா

C- அபய வாவி

ii.பெரிய குளங்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணங்களை குறிப்பிடுக

iii. புராதன காலத்தில் கைத்தொழில் முன்னேற்றமடைந்ததை இரண்டு காரணங்களுடாக விளக்குக.

iv. முன்வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட தொழிநுட்ப முறைகள் மூன்று காரணங்களுடாக விளக்குக.

03) i. சமய சார்புடைய கட்டடங்களுக்கு உதாரணம் மூன்று தருக

ii. A- கைத்தொழில் துறை வளர்ச்சியடைந்தமைக்கான சான்றுகள் 2 தருக

B- புராதன காலத்தில் நில அளவைக்காக பயன்படுத்தப்பட்ட அலகுகளை இரண்டை குறிப்பிடுக.

iii.புராதனகாலத்தில் கட்டிட கலை முறையில் உயர்தொழிநுட்ப முறையை பயன்படுத்தினர் என்பதனை இரண்டு காரணிகள் துணையுடன் விளக்குக

iv.குளமொன்றின் பிரதான உறுப்புகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக

www.lkedu.lk